<u>பதிவு அஞ்சல் மூலமாக</u>

<u>துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் செங்கல்பட்டு மாவட்டம், அவர்களின் செயல்முறை ஆணை</u>
<u>பிறப்பிப்பவர் :மரு.பா.பரணிதரன்.,எம்பிபிஎஸ்.,டிபிஎச்.,எம்பிஎச்.,எம்பிஏ.,</u>

மு.மு.எண்.7769/ப1/2023

நாள். .11.2023

பொருள்:- பணியாளர் தொகுதி - பொது சுகாதாரம் - திருமதி.S.ஹேமா, இளநிலை உதவியாளர் ஆரம்ப சுகாதார நிலையம், பதுவஞ்சேரி - என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து - ஆணை வழங்கப்படுவது - தொடர்பாக.

பார்வை:-
1. அரசாணை எண்.131 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை(எல்-1) நாள்.01.03.1996 (ம) 24.10.2013.
2. அரசாணை எண்.232 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை(எல்-1) நாள்.17.10.2013.
3. அரசாணை எண்.240 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை(எல்-1) நாள்.24.10.2013.
4. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித ந.க.எண்.2498/PSD-1/2020, நாள்.26.05.2020.
6. இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, சென்னை-06 அவர்களின் ந.க.எண்.52638/E4/S4/2020-66 நாள்.26.08.2020.
7. மேடவாக்கம் வட்டார மருத்துவ அலுவலர் அவர்களின் கடித ந.க.எண்.564/ஆசுநி/2021, நாள்.23.11.2023.

*************

<u>ஆணை:</u>

பார்வையில் கானும் அரசாணை மற்றும் இயக்குநர் அலுவலக கடிதத்தின்படி திருமதி.S.ஹேமா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமன ஆணை வழங்கி பதுவஞ்சேரி, அரசு ஆரம்ப சுகாதார அலுவலகத்தில் பணியில் இணைய ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து தனியர் 23.09.2020 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார்.

எனவே, மேற்கண்ட பணியாளரின் தற்காலிக பணி இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு மாநில பொது மற்றும் சார்நிலைப்பணிகள் விதி 28(1) யின்படி (பணிமுறைமைகள் சட்டம் 2016 பிரிவு) இளநிலை உதவியாளர் பணியில் இணைந்த நாளான 23.09.2020 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டதை தொடர்ந்து மூன்றாண்டுகளில் இரண்டாண்டு பணிமுடித்தப்பிறகு தகுதிகாண் பருவம் முடித்ததற்கான ஆணை வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டது குறித்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்,
செங்கல்பட்டு மாவட்டம்.

27.11.23

<u>பெறுநர்</u>

திருமதி.S.ஹேமா, இளநிலை உதவியாளர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பதுவஞ்சேரி.
(மேடவாக்கம் வட்டார மருத்துவ அலுவலர் மூலமாக)

<u>நகல்</u> வட்டார மருத்துவ அலுவலர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மேடவாக்கம்.
(தனியரின் பணிப்பதிவேடு (தொகுதி 1) இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. மேலும் பணிப்பதிவேடு பெற்றமைக்கான ஒப்புகை ரசீதினை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு மேடவாக்கம், வட்டார மருத்துவ அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறது.)

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது - இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, சென்னை - 06.

கோப்பு-1.